செய்தி வெளியீடு எண்– 49 நாள்–12.01.2010

**<u>சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வீடியோகான் நிறுவனத்தின் மூலம் ரூ. 1600 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள தொழிற்சாலை குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை</u>**

* * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை பன்னாட்டு நிறுவனமான வீடியோகான் குழுமத்தின் தலைவர் திரு. வேணுகோபால் N. தூத் அவர்கள், இன்று (12.1.2010), தலைமைச் செயலகத்தில், நேரில் சந்தித்து, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உள்ள சிப்காட் வளாகத்தில் அமைக்கப்படவுள்ள தொழிற்சாலை பற்றி ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் வீடியோகான் நிறுவனத்தின் தொழிற்சாலையினை தொடங்க தொழில் வழிகாட்டி (Guidance Bureau) மற்றும் தொழில் துறை அதிகாரிகளுடன் வீடியோகான் நிறுவனம் பேச்சு வார்த்தை நடத்தி, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் 70 ஏக்கர் நிலத்தை தெரிவு செய்துள்ளது. விடியோகான் நிறுவனம் இத்திட்டத்திற்காக ரூபாய் 1600 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதன் மூலம் 1000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும்.

விடியோகான் நிறுவனம் விடியோகான், எலக்ட்ராலக்ஸ், கெல்வினேடர், அகாய், கென்ஸ்டார் போன்ற பிரபலமான பெயர்களில் மின்னணு பொருட்களை தன்னுடைய குழுமத்தின் சார்வில் தயாரித்து வருகிறது. பன்னாட்டு நிறுவனமான விடியோகான் நிறுவனம், தற்போது எல்.சி.டி (LCD) மற்றும் பிளாஸ்மா (Plasma) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், காட்சிப்பலகை, கைப்பேசி, கணினி, குளிர்சாதனங்கள் போன்ற பொருட்களை தயாரிக்க யூனிடி அப்ளையன்சஸ் என்ற புதிய துணை நிறுவனத்தை வீடியோகான் தொடங்கியுள்ளது. யூனிடி அப்ளையன்ஸஸ் நிறுவனம் (வீடியோகான் குழுமம்) தனது முதற்கட்ட உற்பத்தியினை ஏப்ரல் 2010ம் மாதத்தில் துவங்கத் திட்டமிட்டுள்ளது.